# புராணங்களில் சைவ சித்தாந்தம்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
இலங்கை

பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் வேத நுட்பங்களையும் அவற்றை உள்ளத்திற் பதிப்பதற்குரிய உபாயங்களையும் அற்புதமான கதைகள் மூலம் எடுத்து விளக்குவது புராணமாகும். வேத நுட்பங்களை எல்லோராலும் அறிந்து கொள்ளல் இயலாது. எனவே பாமரமக்களும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் புராணங்கள் தோன்றின. இவற்றின் தோற்றமே இந்து மதத்துக்கு ஓர் எழுச்சியைக் கொடுத்தது என்றால் மிகை ஒன்றும் இல்லை. மெய்ப் பொருளாகிய கடவுட் கொள்கையில் புராணகாலம் ஒரு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இவ்வளர்ச்சியின் முற்பட்ட நிலையைக் காட்டுவனவே புராணங்கள். புராணம் என்பதற்கே பழமை என்பதுதான் பொருள். புராணங்களில் சொல்லப்படும் வரலாறுகளிற் சில பொருத்தம் இல்லாதவை போலத் தோன்றினாலும் யாவும் சில உண்மைகளை அடிநிலையாகக் கொண்டவையாம். அவ்வுண்மைகளை மூன்றுவகைப்படுத்திக் கூறலாம்.

ஒன்று - உண்மை நிகழ்ச்சி. இரண்டு - மக்கள் தமது கொள்கையை வலியுறுத்தல். மூன்று நுண்பொருளைப் பருப் பொருளாக விளக்குதல். இவ்வுண்மைகளைக் கொண்டு நமது சமயவரலாறுகள் பதினெண் புராணங்களாக வகுக்கப்பட்டுள்ளன. வேதங்களும், ஆகமங்களும் கற்றவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு உணர இயலாது. ஆகையால் இவற்றின் நுட்பத்தை விரித்துக்காட்டி எல்லோரும் உணரும் வண்ணம் புராணங்கள் எழுதப்பட்டன. நம் நாடெங்கும் சமய உணர்வைத் தோற்றுவித்தது புராணங்களே. வேதாகமங்களை ஓதி உணர்வோரும் புராணங்களை உணர்தல் இன்றியமையாததே. வேதங்களையெல்லாம் ஓதாமலே உணர்ந்த வியாசமுனிவர் புராணங்களைச் சனற்குமார முனிவரை வழிபட்டுக் கேட்டு உணர்ந்தார் என்று வரலாறு கூறப்படுகின்றது. இதனால் புராணங்கள் எத்துணைச் சிறப்புடையன என்பது விளங்கும். சித்தாந்த நூல்களில் மிக விரிந்த நூலாய் எல்லாவற்றையும் முற்றறக் கூறும் சிவஞான சித்தியார் சித்தாந்தமாகி மேல்நிலைக்கு உள்ள படிகள் பலவற்றை முறைப்படுத்திக் கூறுமிடத்தில், பலவகையாகப் பரந்து விரிந்து கிடக்கும் வேதத்தின் முடிந்த பொருள் இது என்பதை இனிதுணர்தற்குப் புராணங்களை ஓதி உணர்தல் வேண்டும். "சிறப்புடைய புராணங்கள்" உணர்த்தும் வேதச சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்திறத்தடைவர் எனக் கூறுகின்றது.

"புறச்சமய நெறி நின்றும் அகச்சமயம் புக்கும்
புகழ் மிருதி வழி யுழன்றும் புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதிற் சரியை கிரியா யோகம்
செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"

என்பது அச்செய்யுள். புராணங்கள் பதினெட்டு என்னும் வரையறை தொன்று தொட்ட மரபு. அதனால் அவற்றுள் சில சிறப்புடையன. சில சிறப்பில்லாதன என்பதில்லை. எல்லாமே சிறப்புடையனதாம். அதனால் சிறப்புடைய புராணங்கள் என்றது மெய்ந்நெறியின் உண்மையைத் தெளிய விளக்கிய ப டியாம். வேதத்தில் பல தெய்வ வழிபாடுகளும் பல தெய்வங்கட்கு முதன்மையும் கூறப்படுவதால் எத்தெய்வம் முழுமுதற் தன்மையுடைய முதற் கடவுள் என்ற ஐயம் எழும். பதினெண் புராணங்களையும் உற்றுநோக்கி உணருமிடத்து அவ் ஐயம் நீங்க ஒரு தலையான உணர்வு உண்டாவதாகும். ஆகவே புராணங்கள் சிறப்புடைய பெருநூல்கள் என்பது தெளியப்படுவதாம். ஞானசம்பந்தர் அருளிய திருப்பாசுரத் திருப்பதிகத்திலும்

"வேத முதல்வன் முதலே முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக் கோவை சொல்லே"

எனப் பாடியுள்ளனர். சூதமா முனிவர் ஏனைய முனிவர் பலர்க்கும் எடுத்துக் கூறிய புராணங்களை அனைவரும் ஓதியுணர்ந்து உய்யவேண்டுமென்று குறிப்பிட்ட திருஞானசம்பந்தர் வாக்கைச் சேக்கிழார் விளக்கியருளிய இடத்தில் 'பதினெண் புராணங்களென்றே ஓதென்றுரை செய்தனர் யாவும் ஓதாதுணர்ந்தார்" எனப்பாடியருளினார்.

இத்தகைய மேன்மைவாய்ந்த புராணங்களில் கந்த புராணம் முதன்மை வாய்ந்தது. அத்துடன் சைவத்தமிழ் மக்கள் என்றும் ஏத்திப் போற்றும் செந்தமிழ்க் காப்பியமாகிய பெரிய புராணமும் தமிழ் வளர்த்த கூடலில் தோன்றிய திருவிளையாடற்புராணமும் ஓதியுணரற் பாலனவாகும். சைவத்தின் மூன்று கண்களென்று இவற்றைப் போற்றலாம். இறைவனுடைய திரிநேத்திரம் போல் இவை அமைந்துள்ளன. அக்கினி நயனம் எனப்படுவது கந்தபுராணம்; சூரிய நயனம் எனப்படுவது பெரிய புராணம்; சந்திர நயனம் எனப்படுவது திருவிளையாடற் புராணம்; நெற்றிக் கண்ணிலிருந்து தெறித்த பொறியின் வழியாக உதித்த கந்தனின் மகிமை பேசுவது கந்தபுராணம். சூரிய குலமன்னராகிய அநபாய சோழன் விரும்பிக் கேட்கப் பாடப்பட்டது பெரிய புராணம். சந்திரகுல மன்னர் ஆண்ட மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்டது திருவிளையாடற் புராணம்.

இவற்றில் அமைந்த சைவசித்தாந்தக் கருத்துக்களை முறையே சிறிது கவனிப்போம்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை

வான்திகழ் தளையென வகுப்பரன்னவே"

காசிப முனிவர் தமது மக்களாகிய சூரபன்மனாதியோருக்கு உபதேசிப்பதற்குத் தொடங்கிய பாடமே சைவசித்தாந்த பாடமாகும். அதுவுமின்றி உற்பத்தி காண்டம் இறைவனுடைய தடத்த இலக்கணத்தை விளக்குமிடம் அற்புதமாய் அமைந்துள்ளது.

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுருவானபோது
திருமேனி யுபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுதானே."

என்ற பாடற் கருத்தமைய அருவம் அருவுருவம் உருவம் ஆகிய நிலைகள் இறைவன் கொள்ளும் தடத்த நிலைகளாகும். திருக்கயிலாயத்தில் தேவர்கள் எல்லோரும் கூடிச் சிவபெருமானை நோக்கி இறைவா நீயொரு குமரனைத் தரவேண்டும் என்று வேண்டி நின்றார்கள். அப்பொழுது முருகன் அவர்கள் எண்ணத்தில் அருவமாகின்றான். இது மண்ணுள்ளே மறைந்து நிற்கும் முளை போன்றது. பின்பு முருகப்பெருமான் சோதிப் 'பிழம்பாக இறைவனின் நெற்றிக் கண்ணிலிருந்து உதயமான தன்மை அருவுருவம் எனப்படும். முளையானது காட்சிக்கு வெளிவந்தமைந்த நிலை உருவம் எனப்படுவது. இது முளைத்து இலை தளிரோடு காட்சியளிக்கும் நிலை. கந்தபுராணத்தில் முருக அவதாரத்தில் இக்கருத்தமைந்த பாடலைக் காண்போம்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தான் உலகமுய்ய"

கந்தபுராணத் தத்துவமே சைவசித்தாந்த விரிவாகும். முருகவேள் பரம் பொருளாகவும், வேல் ஞானமாகவும், மயில் விந்துவாகவும், சேவல் நாதமாகவும், வள்ளிப்பிராட்டி இச்சாசக்தியாகவும், தெய்வயானை கிரியாசக்தியாகவும், சூரன், சிங்கன், தாரகன் மும்மலங்களாகவும் அமைய விளங்குவது கந்தபுராணத் தத்துவம். ஆன்மாக்களைத் துன்புறுத்தும் ஆணவமலத்தின் வலியைக் கெடுத்து ஆன்மாக்களுக்கு அருள்புரிவதே கந்தபுராண வரலாறு.

அடுத்து பெரிய புராணம் காட்டும் சைவசித்தாந்தம் பற்றிக் கவனிப்போம்.

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்பது காப்புச் செய்யுள். எங்கும் நிறைந்து நிற்கும் பரம் பொருள்: மனம், வாக்கு, காயங்கட்கு அப்பாற்பட்டவன். அன்பர்கள் பொருட்டு வடிவம் எடுத்து விளங்குபவன். குற்றமற்ற சோதி சொரூபமானவன் தில்லையம்பலத்தே ஆடுகிறான். அவனுடைய சிலம்பொலிக்கும் திருவடிகள் அன்பர்கள் உள்ளத்தே மலர்கின்றன. அவற்றை வாழ்த்தி வணங்குவோம் என்பதாகும். அப்பாடலிலும் சொரூப தடத்த நிலைகளும் அதனை அறிந்து வழிபட்டுய்யும் ஆன்மாக்கள் புண்ணியமும் காட்டப்படுகிறது.

நல்வினை, தீவினை காரணமாகப் பிறவி ஏற்படுகின்ற தென்றும் "அவா என்ப எல்லா உயிர்க்கும் தவாப் பிறப்பீனும் வித்து" என்பதற்கிசையப் பிறவிக்கு ஆசையே காரணம் என்பதும் சுந்தரர் வரலாறு காட்டும் சைவசித்தாந்த நுட்பமாகும். திருக்கயிலாயத்தில் இரு பெண்கள் மேல் வைத்த ஆசை காரணமாகப் பூலோகத்தில் வந்து பிறக்கும் நிலை சுந்தரருக்கு ஏற்பட்டதென்பதும், தாம் செய்த வினையைப் பூலோகத்தில் தாமே அனுபவிக்கக் கிடைத்தது என்பதும் சுந்தரர், பரவையார், சங்கிலியார் வரலாறுகள் காட்டுவன.

இளையான் குடிமாறர் புராணத்தில் பாசம், பழி என்ற சொற்கள் பொருத்தமாகக் கையாளப்படுகின்றன. பசித்துவந்த சிவனடியாருக்குக் குறும்பயிர் தடவிப் பிடுங்கிக் கறியமுதாக்குவதற்குக் கொடுக்கிறார் மாறர். நள்ளிரவில் கொட்டும் மழையில் வீட்டின் கொல்லைப்புறம் சென்று குழிக்கு மேல் வராத குறும்பயிரைத் (கீரைவகை) தடவி வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்து சமையல் செய்வதன்மூலம் புராணப்படனம் ஆற்றிக் கற்றார் வாய்க் கேட்டு பேசப்படுகிறது.

"குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப் பழி முதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"

என்பது பெரியபுராணம். பாசம் பழியாவும் வேரோடு அறுபடுவது போலத் கீரைச் செடியையும் பிடுங்கினார் என்கிறார். அதாவது அவருடைய வினை மாசு நீங்குகிறது என்பதைப் புலப்படுத்துகிறார். சேக்கிழார் பெருமான் காலத்தில் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த நூல்கள் எதுவும் தோன்றிற்றிலது. இவைகள் சிறிது காலத்துக்குப் பின்னரே தோன்றலாயின. எனினும் பதி, பசு, பாசம் மும்மலம், இருவினை, பெத்தம், முத்தி நான்கு பாதங்கள், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநி பாதம் ஆகியவற்றின் விளக்கம் ஆங்காங்கே காட்டப்படுகிறது. கண்ணப்ப நாயனார் புராணத்திலே

"முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை அறியுந்தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்றலாலே"

என்று குறிப்பிடுமிடம் இருவினையொப்பு பற்றி

விளக்குகிறது. இன்னும் சைவசித்தாந்தக் குறியீட்டுச் சொற்களையும் கருத்துக்களையும் பல பாடல்களிலே காணமுடிகிறது.

"நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி" என்பதில் அத்துவிதம் பேசப்படுகிறது. இவ்வாறு பல இடங்களைக் காண முடியுமெனினும் விரிவஞ்சி விடுக்க வேண்டியுள்ளது.

மூன்றாவதாகத் திருவிளையாடற் புராணத்துக்கு வருவோம். தொடங்கும் போதே " சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர முத்தியான முதலை" என ஆரம்பிக்கிறார்.

"அருளது சக்தியாகும் அரன்தனக் கருணையன்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"

என்பது சித்தியார் பாடல். இதனை வலியுறுத்துவதாகக் காப்புச் செய்யுள் அமைத்துள்ளது. நூல் செய்வதற்குக் காரணம் கூறுமிடத்திலும் சந்தான பரம்பரை யொன்றைக் காட்டுகிறார் பரஞ்சோதி முனிவர்.

"அண்ணல் பாற் றெளிந்த நந்தியடிகள் பாற்சனற் குமா ரன்
உண்ணிறை யன்பினாய்ந்து வியாதனுக் குணர்த்தவந்தப்
புண்ணிய முனிவன் சூதற் கோதிய புராணம் மூவா
றெண்ணிய விவற்றிற் காந்தத் தீச சங்கிதையின் மாதோ."

மதுரை மாநகரின் சிறப்பை எடுத்துக் காட்டும் இடத்தில் மக்களெல்லோரும் தத்தம் ஒழுக்க நெறியில் நின்று சைவ சித்தாந்திகளாக ஒழுகுவது பற்றிப் பல பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. அதாவது வேதங்களையும் ஆகமங்களையும் பொதுவாகவும் சிறப்பாகவும் சிவபெருமான் ஒருவனே அருளிச் செய்த முறைமையினால் அவற்றுள் இறுதியிற் கூறுகின்ற வீடும் ஒன்று என்றும் இரண்டு என்றும் கூறுகின்ற மாறுபாடு இல்லையாகக் கொண்டு தெளிந்திருந்த குறைவில்லாத சிவயோகிகள் கூட்டமும் கொண்டு விளங்கியது மதுரை மாநகர் என்று கூறுகிறார். அக்கருத்தமைந்த பாடலைப் பின்வரும்:

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி யமலன் தரு நூலிரண்டும்
ஆரணநூல் பொது சைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினாலுலகர்க்கும் சத்திநி பாதர்க்கும்
நிகழ்த்தியவை நீண்மறையி னொழி பொருள் வேதாந்தத்
தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிறநூல்
திகழ் பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்."

என்ற சிவஞானசித்தியார் தெளிவாகக் கூறுகிறது. பரஞ்சோதியார் பாடியருளிய இப்புராணத்தைச் சைவசித்தாந்தப் பெட்டகம் என்றே குறிப்பிடலாம். சரியை, கிரியை, யோக, ஞான நெறி நின்று மக்கள் உய்தியடையும் சிறப்பு பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தில் கிரியை வழிநிற்கும் வைதீக தத்துவம் பின்வரும் பாடலால் விளக்கப்பட்டுள்ளது.

"காலையில் ஆசான் சொல்வழி நித்தக் கடன்
முடித்துச்சி தொட்டந்தி
மாலையினளவும் புராணநூல் கேட்டு
மாலை தொட்டியாம மோர் நான்கும்
சேலன கண்ணாள் பங்கனைப் பூசை செய்க
அப்பூ சனை முடிவில்
மூலமந்திர நூற்றெட்டு நூற்றெட்டு
முறையினால் ஆகுதி முடித்தல்."

என்றும் மேலும் மோட்ச வீடடைதற் பொருட்டு அனுட்டிக்கும் முறைமைகளும் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு புராணங்கள் காட்டும் தத்துவங்கள் மிகவும் அற்புதமானவை. கணவனுக்கு மனைவி கூறுகின்ற இதமான மொழிகள் போன்றவை புராணங்கள் என்று வர்ணிப்பர். கசப்பான மருந்தைச் சக்கரையில் பொதித்துக் கொடுப்பது போல் வேத உண்மைகள் புராணங்களென்னும் அற்புதக் கதைகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

இத்தகைய புராணங்களால்தான் சைவ சமுதாயத்தில் ஓர் எழுச்சி ஏற்பட்டது. பணிகள் பரவ வாய்ப்புகள் பெருகின. அதுவுமின்றிப் பாமர மக்களும் பரம் பொருளிடத்துப் பக்தி கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆகவே எமது சைவ புராணங்களைப் போற்றிச் சிவாலயங்கள், சைவ ஸ்தாபனங்கள் மூலம் புராணப்படனம் ஆற்றிக் கற்றார் வாய்க் கேட்டு நன்னிலையடைவோமாக.